


# நோன்பு குறித்த சில சட்டங்கள்

## அஹ்ஸன் அல்கமி

**ISLAMQATAMIL.COM**

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 01

## நோன்பு என்றால் என்ன?

**நோன்பு என்பது பஜ்ர் உதயமானதிலிருந்து சூரியன் மறையும் வரை, நோன்பை முறிக்கும் காரியங்களை தவிர்ந்து கொள்வதன் மூலம் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றும் ஒரு வணக்கமாகும்.**

பார்க்க :

அல்குர்ஆன் 02:187 & ஸஹிஹுல் புகாரி 1954

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 02

## ரமழான் நோன்பு யார் மீது கடமை?

நோன்பு நோற்க தடைகள் ஏற்படாத, சக்தி பெற்ற, புத்தியுள்ள, பருவ வயதை அடைந்த, (பயணிகள் அல்லாத) ஊரில் தங்கியுள்ள ஒவ்வொரு முஸ்லிமான ஆண்,பெண் இருபாலாருக்கும் கடமையாகும்.

பார்க்க : ஸஹிஹுல் புகாரி & ஸஹிஹுல் முஸ்லிம்

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 03

## ரமழான் நோன்பு ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமை என்பதற்கான ஆதாரம் எது?

அல்லாஹ் கூறுகிறான்:
ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும்(அது) விதிக்கப்பட்டுள்ளது; (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுடையோர் ஆகலாம்.

பார்க்க : அல்குர்ஆன் 02:183

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 04

# நோன்பு எப்போது கடமையாக்கப்பட்டது?

# ஹிஜ்ரி இரண்டில்

பார்க்க :

இமாம் நவவி அவர்களின் அல் மஜ்மூஃ (6/250)

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 05

## ரமலான் மாதம் ஆரம்பிப்பதை எவ்வாறு உறுதி செய்து கொள்வது?

இரு வகையில் உறுதிசெய்து கொள்ளலாம்.

1– ரமலான் மாத பிறையை காண்பதன் மூலம்

2– பிறை தென்படாவிட்டால் ஷஃபான் மாதத்தை முப்பது நாட்களாக பூர்த்தி செய்வதன் மூலம்

பார்க்க : ஸஹிஹுல் புகாரி 1907

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 06

## நோன்பின் ருகுன்கள் (அத்தியவசியமானவை) எத்தனை? அவை எவை?

**நோன்பின் ருகுன்கள் இரண்டு;**
**1– நிய்யத் வைத்தல் (எண்ணம்).**
**2– நோன்பை முறிக்கும் விடயங்களை தவிர்த்தல்.**

பார்க்க : ஸஹிஹுல் புகாரி 01 & 1894

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 07

**ரமலான் நோன்பின் நிபந்தனைகள் எத்தனை? அவை எவை?**

1. முஸ்லிமாக இருத்தல்.
2. புத்தி சுவாதீனமாக இருத்தல்.
3. பருவ வயதை அடைந்திருத்தல்.
4. ஆரோக்கியமாக இருத்தல்.
5. நோன்பை தடுக்கும் விடயங்களிலிருந்து விடுபட்டிருத்தல்.

பார்க்க : அல்குர்ஆன்: 9:54&2:184;
ஸுனன் நஸாஈ: 3432;ஸஹிஹுல் புகாரி:302;

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 08

## நோன்பின் வகைகள் எத்தனை? அவை எவை?

இரண்டு வகைகள்.

01– கட்டாயமான நோன்பு
( ரமலான் நோன்பு , கப்பாரஹ் நோன்பு (தண்டப் பரிகாரம்), நேர்ச்சை நோன்பு )

02–நபிலான(உபரியான) நோன்புகள்.
( திங்கள் வியாழன் நோன்புகள்)

பார்க்க : ஸஹிஹுல் புகாரி 46

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 09

## நோன்பை முறிக்கும் காரியங்கள் எவை?

01.தெரிந்துகொண்டே உண்ணுதல் அல்லது பருகுதல்.
(மறதியாக செய்தால் நோன்பு முறியாது.)
02.உடலுக்கு சக்தி அளிக்கும் மருந்துகள், குளுக்கோஸ், சேலேன் போன்றவற்றை உடலுக்குள் செலுத்தல்
03.பகல் பொழுதில் இல்லறத்தில் ஈடுபடுதல்
04.வேண்டுமென்றே முயற்சிசெய்து வாந்தி எடுத்தல்
05.மாதவிடாய்,பிரசவ இரத்தப்போக்கு ஏற்படல்
06.சுய இன்பம் காணல்

பார்க்க : ஸஹிஹுல் புஹாரி 1894,304&6669

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 10

## நோன்பு நோற்றிருக்கும் போது அனுமதிக்கப்பட்டவை எவை?

1.உமிழ்நீரை விழுங்குதல்.

2.தேவைக்காக உணவின் சுவையை (நாவினால் மாத்திரம்) சுவைத்தல்.(அதனை விழுங்கக் கூடாது).

3.குளித்தல்.

4.பல் துலக்குதல்.

5.மனம் பூசுதல்.

6.குளிர் பெற்றுக் கொள்ளல்.

பார்க்க :புஹாரி: 1925,ஸஹீஹ் அபூ தாவுத்:2365,முஸன்னப் இப்னு அபீ ஷைபா:9370

பதாவா இப்னு தைமியா :25/242,பதாவா இப்னு உஸைமீன்:19/228

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 11

## நோன்பு நோற்றிருக்கும் போது வெறுக்கப்பட்டவை எவை?

1– உளுவின் போது மிகையாக வாய் கொப்பளித்தல் நாசிக்குத் தண்ணீர் செலுத்துதல்

2– தேவையில்லாமல் உணவை சுவைத்தல்.

பார்க்க : ஸஹீஹ் இப்னு மாஜா :333 & பதாவா இப்னு உஸைமீன் 19/357

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 12

## ஐவேளைத்தொழுகையை நிறைவேற்றாது நோன்பு நோற்பவனின் சட்டம் என்ன?

தொழுகையை வேண்டுமென்றே விடுபவன் காபிராவன்.
ஆதலால் அவனின் நோன்பும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
தொழுகையை விடுபனின் ரமழான் நோன்பு உற்பட எந்த அமலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பார்க்க : ஸஹிஹ் முஸ்லிம் 134 | பதாவா இப்னு பாஸ்:15/446

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 13

## நோன்பு விடயத்தில் மக்கள் எத்தனை வகைப்படுகின்றனர்?

1–கட்டாயம் நோன்பை விட வேண்டியவர்கள்.
(மாதவிடாய்,பிரசவ இரத்தப்போக்கு ஏற்படும் பெண்கள்/உயிராபத்து ஏற்படும் என்று பயப்படும் நோயாளி&பிரயாணி)

2– நோன்பை விட அனுமதியுள்ளவர்கள்.
(நோயாளி,பிரயாணி, கற்பிணி பெண்,பாலூட்டும் தாய்)

3– கட்டாயம் நோன்பு நோற்க வேண்டியவர்கள்.
(மேல் கூறிய இரு வகையிரும் தவிர்த்த பருவ வயதை அடைந்த ஆண்,பெண்)

பார்க்க :ஸஹிஹுல் புஹாரி:321,ஸஹிஹ் முஸ்லிம்:1115
அஸ்ஸஹீஹுல் முஸ்னத்:127&ஸூரா அல்பகரா:183

அஹ்ஸன் அல்கமி    IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 14

## ரமழான் நோன்பு விடயத்தில் கட்டாயம் நோன்பை விட வேண்டியவர்களின் சட்டம் என்ன?

**விடுபட்ட நோன்புகளை கணக்கிட்டு வேறு நாற்களில் கழா செய்ய (மீண்டும் நோன்பு நோற்க) வேண்டும்.**

பார்க்க : ஸஹிஹ் முஸ்லிம் :560&2047

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 15

**(ரமழான் நோன்பு விடயத்தில்) நோன்பை விட அனுமதிக்கப்பட்டவர்களின் சட்டம் என்ன?**

**சிரமமில்லையென்றிருந்தால் நோற்பது சிறந்தது.சிரமமாக இருந்தால் நோன்பை நோற்காது, விடுபட்ட நோன்புகளை கணக்கிட்டு வேறு நாற்களில் கழா செய்ய வேண்டும்.**

பார்க்க : அல்குர்ஆன் 02:184,புஹாரி:1947, அஸ்ஸஹீஹுல் முஸ்னத்:127,பதாவா இப்னு பாஸ் 15/225 அஷ்ஷரஹுல் மும்திஃ:(6/220)

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 16

## ரமழானில் கட்டாயம் நோன்பு நோற்க வேண்டியோரின் சட்டம் என்ன?

ரமழான் முழுவதும் நோன்பு நோற்க வேண்டும் .நோன்பை விடுவது பெரும் பாவமாகும். தண்டனைக்குறிய ஒரு செயலாகும். (இல்லரத்தில் மூலம் நோன்பை முறித்தவரைத் தவிர) மற்றவர்கள் தவ்பா செய்து பின் விடுபட்ட நோன்புகளை மீண்டும் (கழா) நோற்க வேண்டும்.

பார்க்க : நூருன் அலத்தர்ப்:(16/201),182

அஹ்ஸன் அல்கமி    IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 17

## உடலுறவின் மூலம் நோன்பை முறித்தவரின் சட்டம் என்ன?

1.தௌபா செய்ய வேண்டும்.

2.விட்ட நோன்பை நோற்க வேண்டும்.

3.ஒரு(முஸ்லிமான) அடிமையை உரிமையிட வேண்டும்.

இதற்கு சக்தி பெறாதவர் இரண்டு மாதங்கள் தொடராக நோன்பு நோற்க வேண்டும்,இதற்கும் சக்தி பெறாதவர் அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும்.

பார்க்க : புஹாரி:1936 & நூருன் அலத்தர்ப்:182

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 18

## ரமழானில் நோன்பு கடமையானோர் நோன்பை விடுபதால் கிடைக்கும் தண்டனை யாது?

நரகில் அவர்களின் குதிகால்கள் கட்டப்பட்டு தொங்கவிடப்பட்டு வாயின் ஓரப்பகுதிகள் பிளக்கப்படும். அதனால் அதிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருக்கும்.

பார்க்க : ஸஹீஹுத் தர்ஹீப்:2393

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 19

## ஷக்குடைய நாள் எது அதில் நோன்பு நோற்பதன் சட்டம் என்ன?

ஷஃபான் பிறை முப்பது ஷக்குடைய (ஷஃபானின் பிறை முப்பதா அல்லது ரமழானின் முதல் பிறையா என்று சந்தோகிக்கும்) நாளாகும்.பிறை தென்படாவிட்டால் அத்தினத்தில் நோன்பு நோற்பது ஹராமாகும்.

பார்க்க :

ஸஹீஹ் நஸாஈ:2187 & அஷ்ஷரஹுல் மும்திஃ:6/479

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 20

## ரமழான் நோன்பின் நிய்யத்தை நாவால் மொழிவதன் சட்டம் என்ன?

அனைத்து இபாதத்களினதும் நிய்யத்தை நாவால் மொழிவது பித்அத்தாகும். நிய்யத்தின் இடம் உள்ளமாகும். நாம் எதை எண்ணுகிறோமோ அது பற்றி நன்கறிந்தவனாக அல்லாஹ் இருக்கிறான். ஆக உள்ளத்தால் நிய்யத் வைப்பதே (எண்ணுவதே) போதுமானது.

பார்க்க : நூருன் அலத்தர்ப்:349

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 21

## ஒருவர் உறுதியாக நோன்பை விட்டுவிட்டேன் என்று எண்ணினால் நோன்பு முறியுமா?

ஆம் .அந்த எண்ணமே அவரின் நோன்பை முறித்துவிடும். அவர் உண்ணாமல், குடிக்காமல் இருந்தாலும் சரியே.

ஏனெனில் நிய்யத் நோன்பின் ரகுன்களின் ஒன்றாகும்.

பார்க்க : லிகாஉல் பாபில் மப்தூஹ்: (29/20)
அல்லிகாஉஷ் ஷஹ்ரி:30

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 22

## யார் மீது ரமழான் நோன்பு கடமையில்லை?

1– பைத்தியகாரன்

2– புத்தி நீங்கியவர்

3–பருவ வயதை அடையாத குழந்தை

பார்க்க : பதாவா இப்னு பாஸ்:15/ 175

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 23

## காயங்களிலிருந்து இரத்தம் வெளியேறுவதால் நோன்பு முறியுமா?

**இல்லை. காயங்களிலிருந்து இரத்தம் வெளியேறுவது நோன்பை முறிக்காது.**

பார்க்க : பதாவா இப்னு பாஸ்:15:271

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 24

## நோன்பாளி ஹிஜாமா அல்லது இரத்த தானம் கொடுப்பதால் நோன்பு முறியுமா?

ஆம். நோன்பாளி ஹிஜாமா அல்லது ,இரத்த தானம் கொடுப்பதால் அவரின் நோன்பு முறிந்துவிடும். ஒரு நோன்பாளி அவரின் நாட்டத்துடன் அதிக இரத்தத்தை வெளியேற்றுவாராக இருந்தால் நோன்பு முறிந்து விடும்.

பார்க்க :

நூருன் அலத்தர்ப்:273 & பதாவா இப்னு பாஸ்:15/272

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 25

## இரத்த பரிசோதனைக்கு இரத்தத்தை எடுப்பது நோன்பை முறிக்குமா?

இல்லை.பரிசோதனைக்கு சிறிய அளவு இரத்தம் எடுப்பது அல்லது சுய முயற்சி இன்றி இரத்தம் வெளியேறுவது நோன்பை முறிக்காது.

பார்க்க : பதாவா இப்னு பாஸ்:15/272

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 26

## நோன்பு முறிவதன் நிபந்தனைகள் எவை?

1–அறிந்து செய்தல்

2–நாடிச் செய்தல்

3–நினைவில் செய்தல்

(இன்ஷா அல்லாஹ் இது குறித்து வரும் தொடர்களில் விரிவாக பார்க்கலாம்)

பார்க்க : அஷ்ஷரஹுல் மும்திஃ:6/384

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 27

## 1)நோன்பு முறிவதன் நிபந்தனைகளில் அறிந்து செய்தல் என்றால் என்ன?

உதாரணமாக சேலேன் ஏற்றுவது நோன்பை முறிக்கும் என்ற சட்டம் அறியாது ஒருவர் சேலேன் ஏற்றினால் நோன்பு முறியாது.
சேலேன் நோன்பை முறிக்கும் என்ற சட்டம் அறிந்து சேலேன் ஏற்றினால் நோன்பு முறியும்

அதேபோல் சூரியன் மறைந்து விட்டது என்று எண்ணி நேரம் அறியாது நோன்பு திறந்த பின் சூரியன் இன்னும் மறைய வில்லை என்று தெரிய வந்தால் நோன்பு முறியாது,அறிந்தால் நோன்பு முறியும்.

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 28

## 2.நோன்பு முறிவதன் நிபந்தனைகளில் நாடுதல் என்றால் என்ன?

ஒருவரின் நாட்டம் இன்றி வற்புறுத்தப்பட்டு பருகினால் நோன்பு முறியாது.
நாட்டத்துடன் பருகினால் நோன்பு முறியும்.

பார்க்க : அஷ்ஷரஹுல் மும்திஃ:6/384

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் - 29

## 3.நோன்பு முறிவதன் நிபந்தனைகளில் நினைவில் வைத்தல் என்பது என்ன?

நோன்பு வைத்த ஒருவர் மறதியாக பருகினால் நோன்பு முறியாது. ஆனால் அவர் நினைவுடன் இருக்கும் போது பருகினால் நோன்பு முறியும்.

பார்க்க : அஷ்ஷரஹுல் மும்திஃ:6/384

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com

# நோன்பு குறித்த சில சட்டங்கள்

தொடர் – 30

## குளிப்புக் கடமையான ஒருவர் உண்மையான பஜ்ர் உதயமான பின் குளிக்க முடியுமா?

ஆம்,பஜ்ருக்கு முன் (உடலுறவு,மாதவிடாய், பிரசவ இரத்தப் போக்கு போன்றவைகளிலிருந்து விடுபட்டு) குளிப்பக் கடமையான ஒருவர் ஸஹர் செய்து விட்டு பின் உண்மையான பஜ்ர் (பஜ்ர் அதான்) பின் குளிப்பதில் குற்றம் ஏதும் இல்லை,அவரின் நோன்பும் முறியாது.

பார்க்க : புஹாரி:1926 & நூருன் அலத்தர்ப்:153

அஹ்ஸன் அல்கமி IslamQAtamil.Com